செ.வெ.எண்: 14/ஏப்ரல் நாள்: 12.04.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம், திருவாடானை சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மற்றும் வாக்குச்சாவடி மையங்களில் நேரடி ஆய்வு.

## இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம், திருவாடானை சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் இன்று (12.04.2016), இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தி அதன்பின்பு வாக்குச்சாவடி மையங்களை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

முதலாவதாக, திருவாடானை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாரதிநகர் பகுதியில் மாவட்ட மகளிர் திட்ட அலுவலகத்தின் சார்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த பெண்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு மனிதச் சங்கிலி நடைபெற்றது. இம்மனிதச் சங்கிலியில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தலைமையில் மனிதச் சங்கிலியில் பங்கேற்ற அனைவரும் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியினை எடுத்துக்கொண்டனர்.

அதன் பின்பு இராமநாதபுரம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் வாக்காளர் சேவை மையத்தினை இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள். அதன்பின்பு வள்ளல்பாரி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வாக்குச்சாவடி மையத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்து, வள்ளல்பாரி நடுநிலைப்பள்ளி வளாகத்திலிருந்து கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு மினி மாரத்தான் தொடர் ஓட்டத்தினையும் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மேலும் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காஞ்சிரங்குடி கிராமத்தில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள் நேரு யுவகேந்திரா சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட வாக்காளர் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளை கிராம பொதுமக்களுடன் சேர்ந்து பார்வையிட்டார். அதன்பின்பு இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் அவர்கள் தலைமையில் கிராம பொதுமக்கள் அனைவரும் வாக்காளர் உறுதிமொழியினை எடுத்துக்கொண்டனர். அதன்பின்பு காஞ்சிரங்குடி கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தினையும் நேரில் சென்று பார்வையிட்டு வாக்குச்சாவடி மையத்தில் பொதுமக்கள் சிரமமின்றி வாக்களித்திட ஏதுவாக அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனவா என்பது குறித்து ஆய்வு செய்தார். தொடர்ந்து காஞ்சிரங்குடி கிராமத்திலுள்ள வாக்குச்சாவடி நிலை விழிப்புணர்வு குழு (Booth Level Awareness Group) உறுப்பினர்களிடம் கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீடாக நேரடியாகச் சென்று விழிப்புணர்வினை ஏற்படுத்தி 100% வாக்குப்பதிவு எய்திட அற்பணிப்பு உணர்வுடன் பணியாற்றிட வேண்டுமென அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சிகளின்போது, மாவட்ட கூடுதல் தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன் (இராமநாதபுரம்), மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ராஜசேகரன் (திருவாடானை), மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு.ஜெயராம் உட்பட அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**